தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

&

**இந்தியவானிலைத் துறை**

தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிறுவனம் - ஆடுதுறை

**மயிலாடுதுறை மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

**(03.09.2025 முதல் 07.09.2025)**

**அறிக்கை எண் 44/2025** **தேதி. 02.09.2025**

## மயிலாடுதுறை மாவட்டத்தின் கடந்த வார வானிலை

மயிலாடுதுறை மாவட்டத்தின் 29.08.2025 முதல் 01.09.2025 வரையிலும் பகல் நேரவெப்பநிலை 34 - 36 °செ ஆகவும் இரவு நேர வெப்பநிலை 26 °செ ஆகவும் காலை நேரகாற்றின் ஈரப்பதம் 81 சதவிகிதமாகவும், மாலைநேரகாற்றின் ஈரப்பதம் 68 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 4 - 11 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் தெற்கு திசை வரை பதிவானது.

## எதிர்பார்க்கப்படும் வானிலை மயிலாடுதுறை (03.09.2025 முதல் 07.09.2025)

| கடந்த வார வானிலை 29.08.2025 மற்றும் 01.09.2025) | | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 07.09.2025- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 29/08 | நாள்-2 30/08 | நாள்-3 31/08 | நாள்-4 01/09 | தேதி | நாள்-1 03/09 | நாள்-2 04/09 | நாள்-3 05/09 | நாள்-4 06/09 | நாள்-5 07/09 |
| 0.0 | 0.0 | 8.7 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 2 | 0 | 2 | 0 |
| 35 | 36 | 36 | 34 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 35 | 35 | 35 | 36 | 36 |
| 26 | 26 | 26 | 26 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 25 | 25 | 25 | 26 | 26 |
| 5 | 4 | 7 | 8 | மேக மூட்டம் (ஆக்டா) | 5 | 5 | 5 | 6 | 6 |
| 71 | 75 | 80 | 81 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 80 | 80 | 80 | 75 | 75 |
| 66 | 67 | 65 | 68 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 70 | 70 | 70 | 65 | 65 |
| 9 | 11 | 6 | 4 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 16 | 20 | 18 | 14 | 14 |
| தெற்கு | தெற்கு | தெற்கு | தெற்கு | காற்றுவீசும் திசை | தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு | தென் தென் மேற்கு | தென் தென் மேற்கு |

## மயிலாடுதுறை மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் தெளிவாக காணப்படும். 04.09.2025 மற்றும் 06.09.2025 ஆகிய தினங்களுக்கு லேசான தூரல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 35 - 36 °செ ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 25 - 26 °செ ஆகவும், காலைநேரகாற்றின் ஈரப்பதம் 80 சதவிகிதமாகவும், மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 70 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்று மணிக்கு 14 – 20எ கி.மீ வேகத்தில் வீசக்கூடும். காற்று பெரும்பாலும் தென் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| **பொது** | | உழவர் பெருமக்கள் அனைவரும் தமிழ் நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் பரிந்துரைக்கப்பட்ட வேளாண் சார்ந்த செயலிகளை பதிவிறக்கம் செய்து பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளபடுகிறது (TNAU AAS, Meghdoot and DAMINI). |
| **நெல்** | **நடவு வயல் நாற்றாங்கால்** | உகந்த வானிலையை பயன்படுத்தி சம்பா நாற்றாங்கால் தயார் செய்து விதைக்கவும். |
| | | சம்பா நாற்றாங்காலில் ஒரு சென்ட்க்கு 2 கிலோ வீதம் டீ.ஏ.பி மேலுரமாக இடவும். |
| | | நெல் நாற்றாங்காலில் இலைப்பேன் தாக்கத்தை தவிர்க்க விதைத்த 10 நாட்களுக்குள் அசார்டிராக்டின் 0.03 சதம் (3 மி.லி/லி) ஒட்டும் திரவமான காதி கோபுர பார் சோப் 3 கிராம் / லி என்ற அளவில் கலந்து நாற்றாங்கால் நன்கு நனையும் படி கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்க வேண்டும். |
| | | உகந்த வானிலையை பயன்படுத்தி சம்பா நெல் பயிரிட வயல்களை உழவு செய்து தயார் செய்யவும் |
| **வாழை** | | வாழை மரங்கள் காற்றினால் சாயாமல் இருக்க வாழை மரங்களுக்கு முட்டுக்கொடுத்து பாதுகாக்கவும். |
| **கால்நடைகளுக்கு** | **மாடு** | கறவை மாடுகளின் மடி வீக்க நோயைக் கட்டுப்படுத்த பொட்டாசியம் பெர்மாங்கனேட் கரைசலைக் கொண்டு, மடியைக் கறப்பதற்கு முன்பும் பின்பும் சுத்தம் செய்யவும் |

## குறுஞ்செய்தி

உகந்த வானிலையை பயன்படுத்தி சம்பா நெல் பயிரிட வயல்களை உழவு செய்து தயார் செய்யவும்

**இயக்குநர்**